




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








சனி ❖ ஜூன். 10, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 246 ❖ ரூ.10


### தமிழகத்தை விட மற்ற மாநிலங்களில் வணிக நிறுவனங்களுக்கான மின் கட்டணம்

# அதிகம்

## வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் 13 பைசாவிலிருந்து 21 பைசா வரை உயர்வு இருக்கும் ;முதல்வர் ஸ்டாலின்



திருச்சி , ஜூன். 10-

"வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கான மின் கட்டணத்தில் மட்டும் 13 பைசாவிலிருந்து 21 பைசா வரை உயர்வு இருக்கும் என்று தெளிவாக சொல்லியிருக்கிறோம், அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. மற்ற மாநிலங்களில் இதை விட அதிகம்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், வணிக (Commercial) மின் கட்டணம் உயர்வினால் வணிகம் பாதிக்கப்படும் என்று ஒரு கருத்து இருக்கிறது, அதைக் குறைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்விஎழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், "அதுவும் ஒரே ஒரு பத்திரிகையில்தான் அதை பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் அதைப் புரிந்துகொண்டார்கள். திட்டமிட்டு ஒரு பொய்ப் பிரச்சாரம்.

வீட்டு இணைப்பைப் பொறுத்தவரை, அவர்களுக்கு மின் கட்டணத்தை எந்தக் காரணம் கொண்டும் உயர்த்த மாட்டோம் என்று உறுதியாக சொல்லிவிட்டோம். ஆனாலும் ஏற்கெனவே அதே அறிவிக்கைதான் வந்திருக்கிறது. உங்களுக்குத் தெரியும், பார்த்திருப்பீர்கள். புள்ளிவிவரத்துடன் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

வீட்டு இணைப்பிற்கு எந்தவிதமான கட்டண உயர்வும் கிடையாது, அனைத்து இலவச இணைப்புகளும் தொடரும் என்று தெளிவாக சொல்லியிருக்கிறோம். அதேபோல வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள் வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் என்பதும் தொடரும். கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கு அளிக்கப்படக்கூடிய இலவச மின்சார சலுகைகளும் அப்படியே தொடரப் போகிறது. அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.

ஒன்றிய அரசின் விதிமுறைப்படி பார்த்தீர்கள் என்றால், 4.7 விழுக்காடு கட்டணம் அதிகரிக்க வேண்டும். ஆனால், 2.18 விழுக்காடாக அதனை குறைத்து, அந்தத் தொகையையும் மானியமாக தமிழக அரசு ஏற்றுக்கொண்டு மின் வாரியத்துக்கு தருவதற்காக அரசு உத்தரவிட்டிருக்கிறது. எனவே, வீட்டு இணைப்புகளை பொறுத்தவரைக்கும் எந்தவிதமான கட்டண உயர்வும் நிச்சயமாக இருக்காது.

வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் அதுவும் 13 பைசாவிலிருந்து 21பைசா வரை உயர்வு இருக்கும் என்று தெளிவாக சொல்லியிருக்கிறோம்; அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. மற்ற மாநிலங்களில் பார்த்தீர்கள் என்றால், இதைவிட அதிகம்.

அதிமுக ஆட்சி இருந்தபோது, அதை செங்குத்தாக மின் கட்டணத்தை உயர்த்தினார்கள். மின் வாரியத்தை கடனில் மூழ்கடித்துவிட்டு போய்விட்டார்கள். அம்மையார் ஜெயலலிதா மருத்துவமனையில் இருந்தபோது, உதய் (UDAY) திட்டத்தில் கையெழுத்திட்டது அதிமுக ஆட்சி. அதனால்தான், இந்தக் கோளாறு எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. இதுதான் உண்மை"என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

## ‘துணை முதல்வர் பதவி’ தகவலே தவறானது அமைச்சர் உதயநிதி விளக்கம்




சென்னை , ஜூன். 10-

துணை முதல்வர் பதவி குறித்த தகவலே தவறானது என்றும், அதுபோன்ற தகவல் எங்கிருந்து வந்தது என்பதும் தனக்கு தெரியாது என்றும் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் தனியார் கல்லூரியில் நடந்த நிகழ்வில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவரிடம், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பணிகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "நேற்று இந்திய விளையாட்டு ஆணையத்தில் இருந்து அதிகாரிகள் வந்திருந்தனர். அடுத்த வாரத்தில், மீண்டும் இந்திய விளையாட்டு ஆணையத்தில் இருந்து நிறைய அதிகாரிகள் வரவுள்ளனர். இந்த வருகையின்போது, தமிழகத்தில் இருக்கக் கூடிய வசதிகளை எல்லாம் ஆய்வு செய்யவுள்ளனர். இதற்காக தமிழக அரசும் தயாராகிக் கொண்டு வருகிறது.

முதன்முறையாக தமிழகத்துக்கு இந்த வாய்ப்பை வழங்கிய மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குருக்கும், மத்திய அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். சிறப்பாக இந்தப் போட்டிகளை நடத்திக் காட்டுவோம் என்று ஏற்கெனவே அவர்களிடம் கூறியிருக்கிறோம். எவ்வாறு செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை நடத்தினோமோ, அதேபோல ஆசிய ஹாக்கிப் போட்டிகளையும், கேலோ இந்தியா போட்டிகளையும் நடத்துவோம் என்று நம்புகிறேன்" என்றார்.

இந்த விழாவுக்கு பிரதமர் கலந்துகொள்வாரா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "இதற்குமுன் நடைபெற்ற கேலோ இந்தியா போட்டிகளின் தொடக்க விழா அல்லது நிறைவு விழாக்களில் பிரதமர் கலந்துகொண்டுள்ளார். எனவே, நிச்சயம் அழைப்பு விடுக்கப்படும்" என்றார்.

கேலோ போட்டிகள் எங்கு நடத்தப்படவுள்ளது என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "சென்னையில் மட்டும் நடத்துவதா அல்லது கோவை, மதுரை உள்ளிட்ட 3 அல்லது 4 இடங்களில் நடத்தலாமா என்பது குறித்து நேற்றுதான் முதல்கட்ட பேச்சுவார்த்தையே நடந்துள்ளது. அடுத்தடுத்தக் கூட்டங்களில் முடிவு செய்யப்படும்" என்றார்.

அமைச்சர் உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்படவுள்ளதாக தகவல் பரவுவதாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "யார் சொன்னது? எங்கிருந்து தகவல் பரவியது? எனக்கு வராத தகவல் உங்களுக்கு எப்படி வந்தது என்று தெரியவில்லையே. அப்படியொரு தகவலே தவறானது. அதுபோன்ற தகவல் எங்கிருந்து வந்தது என்று எனக்கு தெரியாது. நீங்கள் எதைவைத்து சொல்கிறீர்கள் என்பது எனக்கு தெரியவில்லை" என்று அவர் கூறினார்.

## தென்மேற்கு பருவமழை ஆயத்தப் பணிகள் அதிகாரிகளுக்கு தமிழக தலைமைச் செயலாளர் அறிவுறுத்தல்



சென்னை , ஜூன். 10-

சென்னை, நாகப்பட்டினம், கடலூர் போன்ற புயலால் பாதிப்பிற்குள்ளாகும் மாவட்டங்கள் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் பலவீனமாக உள்ள பதாகைகளை கண்டறிந்து அவற்றை அகற்ற, அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தென்மேற்குப் பருவமழை ஆயத்த பணிகள் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தென்மேற்குப் பருவமழை குறித்த ஆயத்த பணிகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் இறையன்பு, தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் தொடர்புடைய துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி மையத்தின் தலைவர், இவ்வாண்டு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் மழைப்பொழிவு பொதுவாக இயல்பாகவே இருக்கும் என்று தெரிவித்தார். மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் தென்மேற்குப் பருவமழை தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மேற்கொள்ளப் பட்டுள்ள ஆயத்த நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், பல்வேறு துறைகளின் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் ஒன்றிய அரசுத் துறை அலுவலர்கள், தென்மேற்குப் பருவமழையினை திறம்பட எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துரைத்தனர். இந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு துறை செயலாளர்கள், சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள், ராணுவம், விமானப்படை, கப்பற்படை, கடலோர காவல்படை, இந்திய வானிலை ஆய்வு மையம், ஒன்றிய நீர்வள ஆணையம், தேசிய பேரிடர் மீட்புப்படை, உள்ளிட்ட ஒன்றிய அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்திலிருந்து, தென்மாவட்ட பேருந்துகள் செல்ல மாற்று வழித்தடங்கள் அமைப்பது தொடர்பாகவும், அரசு பேருந்துகளை போக்குவரத்து நெரிசலின்றி மாற்று வழிபாதையில் ஜி.எஸ்.டி சாலை வழியாக செல்வது தொடர்பாகவும் காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை, மற்றும் வனத்துறையுடன் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் அமல்ராஜ், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் கவிதா ராமு, தாம்பரம் மாநகர காவல் இணை ஆணையாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மூர்த்தி, போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்கள், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் கலெக்டர் மெர்சி ரம்யா தலைமையில் மாவட்ட அளவிலான வங்கியாளர் கூட்டம்




புதுக்கோட்டை , ஜூன். 10-

புதுக்கோட்டை மாவட்டஆட்சியரகத்தில் மாவட்ட அளவிலான வங்கியாளர் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தலைமையில் நேற்று நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் பயனாளிகளுக்கு சுயதொழில் கடன், தொழில் கடன், தனிநபர் கடன், சுயஉதவிக்குழு கடன்உள்ளிட்டபல்வேறு கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் வங்கிகளின் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடனுதவி முன்னேற்றம் குறித்து இன்றையதினம் நடைபெற்ற வங்கியாளர் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மகளிர் திட்டம், தாட்கோ, மாவட்ட தொழில் மையம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன் விபரம் கேட்டறியப்பட்டது. வங்கிகளில் கடனுதவி கோரி நிலுவையில் உள்ள விண்ணப்பங்களில் நடவடிக்கைகள் மேற்கொண்டு கடனுதவி வழங்குமாறு வங்கியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு திட்ட இயக்குநர் ரேவதி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) அ.முத்துரெத்தினம், காரைக்குடி இந்தியன் ஓவர்சீஸ்வங்கி முதன்மை மேலாளர் எழிலரசன், ஆர்.பி.ஐ. துணை பொதுமேலாளர் ரமேஷ், மாவட்ட முன்னோடி வங்கிமேலாளர் ஆனந்த், மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் எஸ்.ரவிச்சந்திரன், நபார்டு மாவட்ட வளர்ச்சி மேலாளர் தீபக்குமார் மற்றும் அலுவலர்கள், அனைத்து வங்கி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## கறம்பக்குடி அரசு மருத்துவமனை 24 மணி நேரமும் இயங்க நடவடிக்கை வேண்டும் ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

கறம்பக்குடி, ஜூன். 10-

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் கறம்பக்குடியில் நேற்று செய்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டார் அவற்றில் கூறியிருப்பதாவது:


கறம்பக்குடியில் இயங்கும் அரசு மருத்துவமனை 24 மணி நேரமும் இயங்கும் வண்ணம் மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையால் அறுவடைக்கு தாயாராக இருந்த நிலையில் சுமார் 1 லட்சம் வாழை மரங்கள் அனைத்தும் முறித்தும் சாய்த்து பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது. பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் அரசு நிவாரணம் வழங்க வேண்டும். நீர் ஆதாரமாக இருக்கக்கூடிய அக்கினியாறு, அம்புலியாறு, வெள்ளாறு போன்ற ஆறுகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி கருவேல மரங்கள், தைல மரங்களை அகற்றிட வேண்டும் என்றும் பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில் தென்னை சாகுபடி அதிக அளவில் நடைபெற்று வருவதால் கொப்பரை தேங்காய் விலையை உயர்த்தி வழங்கி தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் காத்திட வேண்டும் வலியுறுத்தினார். நிகழ்வில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் விவசாய அணி மாநில தலைவர் துவார் ரெங்கராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# கொலை மிரட்டல் குறித்து அச்சப்படவில்லை தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார்



மும்பை , ஜூன்.10–

தனக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டல் குறித்து தான் அச்சப்படவில்லை என்று தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரும் மகாராஷ்ட்ராவின் மூத்த தலைவருமான சரத் பவாருக்கு ஃபேஸ்புக் குறுஞ்செய்தி மூலம்கொலைமிரட்டல் வந்துள்ளது. அந்த செய்தியில், 'நரேந்திர தபோல்கருக்கு என்ன நேர்ந்ததோ அது விரைவில் உங்களுக்கும் நேரும்' என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதையடுத்து, கட்சித் தலைவர்களுடன் மும்பை காவல் ஆணையர் விவேக் பன்சால்கரை நேற்று சந்தித்த சரத் பவாரின் மகள் சுப்ரியா சுலே, இந்தக் கொலை மிரட்டல் குறித்து காவல்துறை தீவிர விசாரணை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், சரத் பவாரின் பாதுகாப்புக்கு மாநில மற்றம் மத்திய உள்துறை அமைச்சர்கள்தான் பொறுப்பு என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில்,தனக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை மிரட்டல் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சரத் பவார், "நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க உரிமை இருக்கிறது. அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் இந்த உரிமை உண்டு. இது போன்று அச்சுறுத்தல் விடுப்பதன் மூலம் ஒருவர் பேசுவதை நிறுத்தி விடலாம் என சில நேரங்களில் சிலர் கருதுகிறார்கள். ஆனால், இது தவறான எண்ணம். காவல் துறை மீதும், சட்டம் – ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் மீதும் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. எனவே, இந்தக் கொலை மிரட்டல் குறித்து நான் அச்சம் கொள்ளவில்லை" என தெரிவித்தார்.

முன்னதாக, இந்தக் கொலை மிரட்டல் குறித்து கருத்து தெரிவித்த முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, "சரத் பவார் மகாராஷ்ட்ராவின் மூத்த, மதிப்புமிக்க தலைவர். அவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பது குறித்து விசாரணை நடத்த காவல் துறைக்கு உத்தரவிட்டுள்ளேன். தேவைப்படின், சரத் பவாருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கவும் அறிவுறுத்தி உள்ளேன்" என தெரிவித்திருந்தார்.

# மாணவர், வாலிபர் சங்கம் நடத்தும் உலகத் திரைப்படவிழா புதுக்கோட்டையில் தொடங்கியது

புதுக்கோட்டை, ஜூன்.10–

இந்திய மாணவர் சங்கமும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கமும் இணைந்து நடத்தும் உலகத் திரைப்பட விழா ஜூன் 10, 11 ஆகிய தேதிகளில் புதுக்கோட்டையில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை வி.சி. திரையரங்கில் நடைபெறும் திரைப்பட விழாவில் உலக அளவில் புகழ்பெற்ற பல்வேறு நாடுகளை, பல்வேறு மொழிகளைச் சேர்ந்த 10 திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளன. ஒவ்வொரு படமும் திரையிடலுக்கு முன்பாக அறிமுகமும், திரையிடல் முடிந்த பிறகு விவாதமும் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வுகளில் சிபிஎம் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், ஜனநாயக மாதர் சங்க அகில இந்திய துணைத் தலைவர் உ.வாசுகி, சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, திரைப்பட இயக்குனர்கள் பாண்டிராஜ்,அயலிமதன், திரைத்துறை பேராசிரியர் எம்.சிவக்குமார், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாநிலச் செயலாளர் ஏ.வி.சிங்காரவேலன், இந்திய மாணவர் சங்க் மாநிலதுணைத்தலைவர் தெள.சம்சீர் அகமது, தமுஎகச திரை இயக்க ஒருங்கிணைப்பாளர் களப்பிரன் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.




# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பள்ளியில் பசுமை வகுப்பறை திறப்பு விழா



**புதுக்கோட்டை, ஜூன்.10–**

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் முற்றிலும்புதியமுயற்சியாக பசுமை வகுப்பறை திறக்கப்பட்டது, இந்த நிகழ்வுக்கு பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமையேற்றார், மரம் வளர்ப்போம் மண் வளம்காப்போம் எனும் எண்ணத்தை குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் விதைக்கும் வகையில் புதிய முயற்சியாக பசுமை வகுப்பறையை பள்ளியின் மேலாண்மை இயக்குனர் நிவேதிதாமூர்த்தி திறந்துவைத்தார்.

பசுமைவகுப்பறையைச் சுற்றிலும் மரக்கன்றுகள், பூந்தொட்டிகள், வைக்கப்பட்டுள்ளன, வகுப்பறைக்கு வரும் மாணவர்கள் கண்ணைக்கவரும் வகையில் அமைந்த பச்சை வண்ணங்களைக் கண்டு வியந்து மகிழ்வார்கள், மாணவர்களின் எதிர்காலம் பசுமையாய் அமையவேதோடு மரம்வளர்த்து மண்வளம் காக்கவேண்டும் என்ற எண்ணம் பசுமையாய் அவர்களுக்குள் பதியவேண்டும் என்ற வகையில் இந்த பசுமை வகுப்பறைகள் திறக்கப்பட்டுள்ளதாக பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி தெரிவித்தார்.

இதன் தொடர்நிகழ்வாக எல்லா வகுப்பறைகளையும் பசுமை வகுப்பறைகளாக மாற்றும் திட்டமும் செயல்பட இருக்கிறது, ஒவ்வொருஆண்டும்பள்ளி கடைசி வேலைநாளில் விதைக்கலாம் அமைப்போடு இணைந்து மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் பள்ளியில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மரக்கன்றுகளை முறையாகப் பராமரிக்கும் மாணவர்களுக்கு சிறப்புபரிசுகள் வழங்கப்படுகின்றன. பசுமை வகுப்பறை திறப்புவிழா நிகழ்வில் பள்ளியின் துணைமுதல்வர் குமரவேல் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, அபிராமசுந்தரி, வரலெட்சுமி, மேலாளர் ராஜா, ஆசிரியர்கள் கணியன் செல்வராஜ், உதயகுமார் மற்றும் ஏராளமான ஆசிரியர்கள் கலந்துகொண்டர், உலகம் வெப்பமயமாதலைத் தவிர்க்கும் பசுமைப்புரட்சியை பள்ளியிலிருந்தே தொடங்கும் விதமாக இந்த பசுமை வகுப்பறை திறப்புவிழா பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.



ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், குறிச்சி ஊராட்சி, செல்லன் குட்டை பகுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.

### புதுக்கோட்டை கீழ 3 -ஆம் வீதியில் உள்ள

# ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி கோயிலில் திருக்கல்யாண வைபவ விழா



புதுக்கோட்டை, ஜூன்.10–

புதுக்கோட்டை கீழ 3 –ஆம் வீதி ஐயர்குளம் கரையில் அமைந்துள்ள ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி கோயிலில் திருக்கல்யாண வைபவ விழாவை முன்னிட்டு கோவிலில் மூலவர் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி சுவாமிக்கும் ஆஞ்சநேயருக்கும் , பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் மலர் அலங்காரத்தில் தீபாராதனை நடைபெற்றது.

பின்னர் மாலையில் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி ஸ்ரீதேவி பூதேவி திருக்கல்யாண வைபவம் ஸ்ரீனிவாசன் ரவிக்குருக்கள் குணசீலன் முன்னிலையில் சிறப்புடன் நடந்தது. பக்தர்கள் அனைவரும் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி ஸ்ரீ தேவி பூதேவி சுவாமியை வழிபட்டனர். பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை, ஆன்மிக அன்பர்கள் சிறப்பாக செய்திருந்தனர், முன்னதாக பெண்கள் வாணவேடிக்கை மேளதாளம் முழங்க சீர்வரிசை, எடுத்துவந்தனர்

### சங்கரன்கோவில் நெடுஞ்சாலை துறை சார்பில்

# திருநெல்வேலி சாலையில் மரக்கன்றுகள் நடும் துவக்க விழா



தென்காசி, ஜூன்.10–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் – திமுகவின் மூத்த தலைவரும், முன்னாள் முதல்வரும் ,முத்தமிழ் அறிஞருமான கலைஞரின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி கடந்த 7ம் தேதி சென்னையில் நடந்தது. இதில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் சார்பில் மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டதுபோல கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதும் உள்ள நெடுஞ்சாலைகளில் 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை துவக்கி வைத்தார். இதன் மூலம் மாநில நெடுஞ்சாலைகளில் இடைவெளி இல்லாமல் மரங்கள் வளர்க்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது .

இதில் மகிழம், வேம்பு ,புனியன், நாவல் , சாக்குகொன்றை ஆகிய மர வகைகள் நடப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் இந்த உத்தரவினை தொடர்ந்து சங்கரன்கோவில் நெடுஞ்சாலை துறை சார்பில் திருநெல்வேலி சாலையில் மரக்கன்றுகள் நடும் துவக்க நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு உதவி கோட்ட பொறியாளர் உலகம்மாள் தலைமை வகித்தார். சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், ஒன்றியச் செயலாளர் பெரியதுரை, நகரச் செயலாளர் பிரகாஷ், நெடுஞ்சாலை துறை உதவி பொறியாளர்கள் பலவேசம், முத்துமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ மரக்கன்றுகள் நடும் நிகழ்வை துவக்கி வைத்தார், தொடர்ந்து நெடுஞ்சாலை துறை பணியாளர்களிடம் மரக்கன்றுகளை பத்திரமாக பாதுகாத்து அதை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என ஆலோசனைவழங்கினார். இதில் திமுகவைச் சேர்ந்த வீரமணி, வீராசாமி,ஜெயக்குமார் நெடுஞ்சாலை துறை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மணப்பாறையில் நூற்றிப்பத்து ஏக்கர் பரப்பளவு கொண்ட

# வாரியை தூர்வாரிய பொதுபணிதுறை குளத்தையும் தூர்வார தமிழக அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை



மணப்பாறை, ஜூன்.10–

மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிநகரகுழு சார்பில் நூற்றிப்பத்து ஏக்கர் பரப்பளவு கொண்ட மணப்பாறை குளம் வாரியை தூர்வாரியதைபோல் குளத்தையும் தூர்வாரி விவசாயத்தை பாதுகாத்திடவும் நிலத்தடி நீரை முப்பது கிலோ மீட்டருக்கு உயந்திட பொதுபணிதுறைக்கும் தமிழக அரசுக்கும் நகர செயலாளர் ஜனசக்தி உசேன் கோரிக்கை மனுவை அனுப்பிவுள்ளார்

அம்மனுவில் வானம்பாத்த பூமியாக இருக்கும் மணப்பாறை தாலுகா மலைகள் சூற்றி உள்ள பகுதி வடகீழக்கு பருவ மழைகாலங்களில் ஏற்படும் வெள்ள நீர் வெளியேற பெரியாறு டொம்பச்சரி ஆறு, மாமுன்டி ஆறு, அரியாறு கோறையாறு வழியாக காவேரி ஆற்றில் கலந்து கடலுக்கு சென்று விடும் , வீனாக ஆற்றுபகுதிக்கு மழைநீர் செல்லும் முன் தென்பகுதி மலைகளில் இருந்து வெளியேரும் நீர் புத்தாநத்தம் ஊராட்சி இடையபட்டி, பண்ணப்பட்டி ஊராட்சி, பிச்சம்பட்டி, காவக்கரன்பட்டி, பின்னத்தூர்,பெரியகுளம், பொய்கைப்பட்டி ஊராட்சி, ராயம்பட்டி நம்பம்பட்டி , கல்பளைத்தான்பட்டி, பொய்கைகுளம், வடுகபட்டி ஊராட்சி வழியகா மணப்பாறை குளத்திற்கு வரும் அதே போல் மேற்கு பகுதியில் உள்ள மலைபகுதியில் இருந்து வெளியேறும் நீர் மாலையடிபட்டி, வேங்கைகுறிச்சி, ஊராட்சிகளில் உள்ள குளங்களை நிறைப்பி மணப்பாறை குளத்துக்கு வரும் இருபகுதி மலைகளில் இருந்து வெளியேறும் நீர்கள் ராம்மன்ன குளபதியில் சங்கமித்து ஒரே வாரியாக மணப்பாறை குளத்துக்கு வருகிறது, இப்பகுதி வடுகபட்டி ஊராட்சியில் இருப்பாதல் கடந்த காலங்களில் நடைபெற்ற கிராமசபைகூட்டங்களில் வாரியை தூர்வார கோரி தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டு உள்ளன இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகரகுழு சார்பில் தமிழக அரசுக்கு பொதுப்பணி துறைக்கு கடந்த 2021 ஆண்டு ஜுன் மாதமும் 2022 ஆண்டும் ஜுன் மாதமும் மனு அனுப்பி உள்ளோம்

கடந்த 2021ம் ஆண்டு மணப்பாறை நகரை நவம்பர் மாதம் ஒரு நாள் சுமர் இரண்டு மணி நேரம் கொட்டிதீர்த்த கனமழையால் வெள்ளம் சூழ்ந்து நிலை குலையச் செய்தது அந்நிலை மீண்டும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்துமனுகொடுத்து வலியுறுத்துகிறது

தற்போது நீர் வரத்து வாரிகள் தூர்வார பட்டும் அதேபோல் கழிங்கி பகுதியில் உள்ள. மாமுன்டி ஆற்றுக்கு செல்லும் வாரியும் தூர்வார பட்டுவுள்ளது ஆனால் குளம்தூர்வாரப் படவில்லை குளம் வனபகுதியாக காட்சி கொடுகிறது வனப்பகுதில் அடந்து இருப்பது போல் சீமை கருவேலமரங்கள் மண்டிக்கிடகிறது இதனால் குளத்தின் பரப்பும்குறையதொடங்கி உள்ளது குளத்தில் ஒருபகுதியில் மட்டும்தான் கரைவுள்ளது குளத்தை சுற்றி கரையை எழுப்பிட குளத்தை தூர்வாரிய மண்ணே போதும் ஆனால் பொதுபணித் துறை வாரியை தூர்வாரி உள்ளது, குளத்தை தூர்வார வில்லை

நூற்றிபத்துஏக்கர்பரப்பு குளத்தை முழுமையாக தூர்வாரி விவசாயத்தை பாதுகாக்கவும் முப்பது கிலோமீட்டர் சூற்றளவு நிலத்தடி நீரை உயரவும் இயற்கை கொடுக்கும் நீரை விரையம் செய்யமால் சேமிக்கவும் பொதுபணிதுறைக்கும், தமிழக அரசுக்கும் நடவடிக்கை எடுக்க. வேண்டும்என்றுகோரிக்கை விடுத்துள்ளனர்

10.06.2023 ❖ வரலாறு

# அரசூர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி மாரியம்மன் ஆலய பால்குட அபிஷேக விழா



தரங்கம்பாடி, ஜூன். 10-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, வதிஸ்டாச்சேரிஊராட்சிஅரசூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி மாரியம்மா ஆலய பால்குட அபிஷேக விழா நடைபெற்றது.

கடந்த 5-ஆம் தேதி டி ராஜராஜேஸ்வரி மாரியம்மன் ஆலயத்தில் காப்புக்கட்டி துவங்கிய விழாவானது, வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் வதிஸ்ட்டாச்சேரி சிவன் கோவிலில் இருந்து சக்தி கரகத்துடன், பால்குடம், பம்பை மேளம் முழங்க, பச்சைக்காளி, பவளக்காளி, பத்ரகாளி ஆட்டத்துடன் முக்கிய வீதிகள் வழியாக விரதம் இருந்த ஏராளமான பக்தர்கள் ராஜராஜேஸ்வரி மாரியம்மனுக்கு பரிவாரங்களுடன் கோயிலை வந்தடைந்தது.

அதைத்தொடர்ந்து சக்தி கரகம் கோயிலை வலம் வந்து தீபாராதனை காண்பிக்கப்பட்டு அம்மனுக்கு வாசனை திரவியங்கள் மற்றும் பால் அபிஷேகங்கள் நடைபெற்றது. தொடர்ந்து பல்வகை பூக்கள் அலங்காரங்கள் செய்யப்பட்டு அம்மனுக்கு மகாதீபாரதம் காட்டப்பட்டது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து அம்மனுக்கு மாவிளக்கு பூஜைகள் செய்து வழிபட்டனர். கோவில் வளாகத்தில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சிசல் நாட்டின் தொழிலதிபர்கள் ராமதாஸ், கருணாநிதி சகோதரர்கள் அன்னதானம் வழங்கினர். பால்குட நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அரசூர் கிராமவாசிகள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

# சங்கரன்பந்தல் ஸ்ரீ கண்கொடுத்த மாரியம்மன் ஆலய பால்குட விழா



தரங்கம்பாடி, ஜூன்- 10;

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, சங்கரன்பந்தல் -தமிழன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு கண்கொடுத்த மாரியம்மன் ஆலய பால்திருவிழா நடைபெற்றது. பால்குட திருவிழாவை முன்னிட்டு தமிழன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு சங்கரநாத சுவாமி திருக்கோவிலில் சந்திரநாராயண சுவாமி கோயிலில் இருந்து கண்கொடுத்த மாரியம்மனுக்கு விரதம் இருந்த பக்தர்கள் ஏராளமானோர் பால்குடம் எடுத்து முக்கிய வீதிகள் வழியாக கோவிலை வந்தடைந்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

தொடர்ந்து பம்பை மேளம் முழங்க அம்மனுக்கு பல்வேறு திரவியங்கள் அபிஷேகம், பாலாபிஷேகம் நடைபெற்றது. அம்மனுக்கு பல்வேறு பூக்களால் அலங்காரங்கள் செய்து மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் மற்றும் மாவிளக்கு பூஜைகள் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை சங்கரன்பந்தல் தமிழன் தெரு கிராமவாசிகள் விழா குழுவினர் செய்திருந்தனர்.

# கலெக்டர் தலைமையில் காரைக்காலில் ஹஜ் புனிதப்பயணம் மேற்கொள்வோரை வழியனுப்பும் நிகழ்ச்சி



காரைக்கால்,ஜூன்,10

மத நல்லிணக்கத்தை போற்றும் வகையில் காரைக்கால் மாவட்டத்தில் ஆண்டு தோறும் அரசு சார்பில் ஹஜ் புனிதப்பயணம் மேற்கொள்வோரை வழியனுப்பும் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்தாண்டு காரைக்கால் மாவட்டத்திலிருந்து 27 பேர் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர். இப்பயணம் காரைக்காலில் இருந்து 36- ஆவது ஆண்டாக இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் சமாதான கமிட்டி உறுப்பினர்கள் இவர்களின் சார்பில் ஹஜ் பயணிகளை கவுரவித்து வழியனுப்பி வைக்கும் நிகழ்ச்சி காரைக்கால் நகராட்சி அலுவலக அரங்கில் நடைபெற்றது. இதில் காரைக்கால் மாவட்ட மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் கலந்து கொண்டு மும்மத பிரார்த்தனைகளுக்கு பிறகு ஹஜ் பயணிகளை கவுரவித்து வாழ்த்திப் பேசினார்கள்.

மாவட்ட ஆட்சியர் பேசுகையில் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக காரைக்கால் மாவட்டம் திகழ்வது மிகவும் பாராட்டுக்குரியதாகும் என்றும் மும்மதத்தை சார்ந்தவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பது மிகவும் மகிழ்ச்சிகரமான செயலாகும் என்றும் கூறிய ஆட்சியர் உங்கள் பயணம் வெற்றிகரமாக அமைய மாவட்ட நிர்வாகம் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மேலும் ஹஜ் பயணம் செல்லும் அனைவருக்கும் சால்வை அணிவித்து மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டோர் வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் துனை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் துனை ஆட்சியர் (பே. மே.) பாஸ்கரன் காவல் கண்காணிப்பாளர் சுப்ரமணியன் புதுவை மாநில ஹஜ் கமிட்டி தலைவர் இஸ்மாயில் மற்றும் ஹஜ் கமிட்டி மற்றும் சமாதான கமிட்டி உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தென்காசியில் தனது நிறுவனத்தில் படித்த மாணவியிடம்

# தகாத வார்த்தைகள் பேசி பாலியல் ரீதியான தொல்லை கொடுத்ததாக கல்வி நிறுவன முதல்வர் கைது

தென்காசி, ஜூன்.10-

தென்காசியில் தனது நிறுவனத்தில் படித்து வந்த மாணவியிடம் தகாத வார்த்தைகள் பேசி பாலியல் ரீதியான தொல்லை கொடுத்ததாக கல்வி நிறுவன முதல்வர் கைது செய்யப்பட்டார்.

தென்காசி மாவட்டம் தென்காசி நடுப்பேட்டை தெருவை சேர்ந்த முகமது அன்சாரி ( 46), இவர் ஆசாத் நகர் பகுதியில் ஆசாத் நகரில் மாஸ் குரூப் ஆஃப் இன்ஸ்டிடியூஷன் (பாராமெடிக்கல்) என்ற பெயரில் கல்வி நிறுவனம் நடத்தி வருகிறார். இதில் சுமார் 35 மாணவிகள் பயின்று வருகின்றனர்.

முகமது அன்சாரி நர்சிங் இன்ஸ்டிடியூஷன் முதல்வராகவும் இருந்து வருகிறார். இவர் தன்னிடம் பயிலும் மாணவி ஒருவரிடம் அடிக்கடி செல்போனில் தொடர்பு கொண்டு ஆபாச வார்த்தைகள் பேசியும் பாலுணர்வை தூண்டும் விதமாக பேசியும் தொல்லை கொடுத்து வந்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து அந்த மாணவி கொடுத்த புகாரின் பேரில் குற்றாலம் போலீசார் வழக்கு பதிவு செய்து முகமது அன்சாரி மீது .போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்தனர் . முகமது அன்சாரி தனது நிறுவனத்தில் பயிலும் மாணவிகளை சீருடையுடன் ஆட்சியர் அலுவலகத்துக்கும் எல்லா அரசு நிகழ்ச்சிகளுக்கும் வரவேற்பு மற்றும் மருத்துவ சோதனை பணிகளில் ஈடுபடுத்தி வந்தார்



அரசுக்கு எந்த செலவும் இல்லாமல் ஒரு சமூக அக்கறையுடன் இவர் செயல்படுவதாக நினைத்த உயர் அதிகாரிகள் அனைவரும் அன்சாரியுடன் நன்கு பழகினர். இதன் மூலம் கலெக்டர் அலுவலகத்தில் அவர் ஒரு அரசு ஊழியர் போலவே வலம் வந்தார், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மிகவும் நெருக்கமாக இருப்பதாக காட்டிக் கொண்டு அவர் வலம் வந்ததால் அவர் ஒரு அரசு அதிகாரி என்றே நினைத்து பல இரண்டாம் கட்ட அதிகாரிகளும் அரசு ஊழியர்களும் அவரிடம் தங்களது குறைகளை சொல்லி தீர்வு காணுமாறு கேட்டுக் கொண்ட சம்பவங்களும் உண்டு.

இவர் தன்னிடம் பயிலும் மாணவிகளிடம் அவ்வப்போது இது போன்ற தொல்லை கொடுத்ததும், கொடுத்து வந்ததும் அவமானம் கருதி பல மாணவிகள் இதை வெளியே சொல்லாமல் இருந்ததும் தற்போது தெரிய வந்துள்ளது. ஒரு கல்லூரியின் முதல்வரே தனது கல்லூரியில் படிக்கும் மாணவிகளிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டது தென்காசி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



காரைக்கால் மாவட்டம் மீன்வளத் துறையின் சார்பாக நெடுங்காடு-கோட்டுச்சேரி தொகுதிக்குட்பட்ட மீனவ கிராமங்களான மண்டபத்தூர், காளிகுப்பம், அக்கம்பேட்டை & கோட்டுச்சேரிமேடு ஆகிய மீனவ கிராமங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 11 முதியோர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கும் நிகழ்வும் மற்றும் உலக மீன்வள தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வும் கோட்டுச்சேரி போக்குவரத்து அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் சந்திர பிரியங்கா கலந்து கொண்டு முதியோர் உதவித் தொகையையும் பரிசுகளையும் வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் சவுந்திரபாண்டி உடனிருந்தார்.



மதுரை வடக்கு தாலுகா வீரபாண்டி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு சாமி நொண்டிச்சாமி ஆலய அஷ்ட பந்தன கும்பாபிஷேக விழா நடந்ததை முன்னிட்டு சாமிக்கு யாகசாலை பூஜை ,அபிஷேகம், தீபாராதனை மற்றும் பிரசாதம் வழங்குதல் நடைபெற்றது, கோவில் நிர்வாகஸ்தர்கள் செல்லப்பாண்டி, துரைப்பாண்டி, ஆறுமுக பாண்டி, சரவணன், நவநீதகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே தென்பாதியில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு காமாட்சி மகா மாரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோயிலில் தீமிதி திருவிழா கடந்த 31 ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. விழாவின் முக்கிய திருவிழாவான தீமிதி திருவிழாவை முன்னிட்டு பால் குடம் ஊர்வலம் வெகு விமர்சையாக நடைபெற்றது. உப்பனாற்றிலிருந்து பால்குடம், பால்காவடி, பன்னீர் காவடி, அலகு காவடி எடுத்து பக்தர்கள் ஊர்வலமாக புறப்பட்டனர். முக்கிய வீதிகள் வழியே வந்து கோவிலை அடைந்தனர். பின்னர் பக்தர்கள் கொண்டு வந்த பால் கொண்டு அம்பாளுக்கு பால் அபிஷேகம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு நேர்த்திக்கடன் செலுத்தி வழிபாடு செய்தனர்.



காரைக்கால் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்தும், சுகாதார துறையை மேம்படுத்துவது குறித்தும், கல்வியின் தரத்தை உயர்த்துவது குறித்தும், போக்குவரத்து துறை அமைச்சர் சந்திரா பிரியங்கா தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.எச்.நாஜிம், சிவா மற்றும் நாகதியாகராஜன் தலைமைச் செயலர் ராஜீவ் வர்மா , புதுச்சேரி ஆட்சியர் வல்லவன் ,சுகாதார துறை செயலாளர் உதயகுமார் , காரைக்கால் மாவட்ட ஆட்சியர் ஏ.குலோத்துங்கன், பயிற்சி ஆட்சியர் சமயக் எஸ்.ஜெயின் ,முதுநிலை காவல் கண்காணிப்பாளர் விஷ்ணுகுமார் மற்றும் சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர். தம்மாராவ் மற்றும் காரைக்கால் மாவட்ட அரசு அதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை கூட்டம் நேற்று காலை நடைபெற்றது. மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் கூறுகையில் கல்வித்துறை, சுகாதாரத்துறை மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பும்படியும் கோரிக்கை வைத்தார்கள். மேலும் அரசு பொது மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வசதி கேட்டும் கூடுதலாக ஆம்புலன்ஸ் வசதி கேட்டும் பேசினார். நிகழ்ச்சியின் நிறைவில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் நன்றியுரை கூறினார்.

# சென்னையில் இருந்து புறப்பட்ட சொகுசுக் கப்பல் இலங்கை திருகோணமலையை வந்தடைந்தது!





இலங்கை, ஜூன்,10

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த முதல் சர்வதேச கப்பல் பயணத்தை, இந்தியமத்தியதுறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால 5 தேதி அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்

இதன்படி சென்னையில் இருந்து புறப்பட்ட எம்வி எம்பிரஸ் என்ற சொகுசுக் கப்பல் நேற்று முன்தினம் திருகோணமலையைவந்தடைந்தது. திருகோணமலையை வந்தடைய அனைத்து ஏற்பாடுகளையும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் செய்ததுடன், அவர் தலைமையில்,பிரதான செயலாளர்,ஆளுநரின் செயலாளர்,திருக்கோணமலை கிழக்கு கடற்படை கட்டளை தளபதி,பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலர் உத்தியோகபூர்வமாக வரவேற்றனர்.

மேலும் அதில் வருகை தந்த பயணிகளுக்கு, திருகோணமலையில் காணப்படும் சுற்றுலா தளங்களை பார்வையிடுவதற்கான சிறப்பு ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டன.

# அரியலூர் மாவட்டம் தா.பழூர் பகுதியில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்கான துவக்க விழா



அரியலூர், ஜூன்.10-

தா.பழூர் பகுதியில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்கான துவக்க விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம் இடங்கன்னி கிராமத்தில் தமிழக முதல்வரின் கிராம சாலை அமைப்பு திட்டத்தின் கீழ் 53.59 லட்சம் மதிப்பில் குறிச்சி கிராமம் வரையில் சாலை அமைப்பு மற்றும் மதனத்தூர் கிராமத்தில் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி ஆகியவற்றை அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணி மேரி சொர்ணா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

அதைத் தொடர்ந்து ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இருகையூர் ஊராட்சி, கூழாட்டுக்குப்பம் கிராமத்தில்,அருந்ததியர் தெருவில் ரூபாய் 5.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, நாயகனைபிரியாள் ஊராட்சி, மேலமிக்கேல்பட்டியில், கல்லறை செல்லும் வழியில் ரூபாய் 5.00 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி, பொற்பதிந்தநல்லூர் ஊராட்சி, அர்த்தனேரி மேலத் தெருவில் ரூபாய் 5.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, சோழன்மாதேவி ஊராட்சி, அம்பிகாபுரம் ஆதிதிராவிடர் காலணி முதல் முதலியார் தெரு வரை ரூபாய் 5.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, கோடாலிகருப்பூர் ஊராட்சி, வக்காரமாரி காலனி தெருவில் ரூபாய் 5.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, ஆகிய பணிகளை, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அமிர்தலிங்கம் (வ.ஊ), விஸ்வநாதன் (கி.ஊ), மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மலர்கண்ணன், உதவி பொறியாளர் சுமதி, ஒன்றிய அலுவலக மேலாளர் பாக்கியராஜ், பணி மேற்பார்வையாளர்கள் ராஜவேல், நிர்மல்குமார், ஊராட்சி மன்றத் தலைவர்கள் தட்சிணாமூர்த்தி (இருகையூர்) ,ராசாராம் (நாயகனைபிரியாள்), சத்தியராஜ் (பொற்பதிந்தநல்லூர்), ஜெயலட்சுமி (சோழன்மாதேவி) , சுதா இளங்கோவன் (கோடாலிகருப்பூர்), திமுக மாவட்ட விவசாய தொழிலாளரணி அமைப்பாளர் என்.ஆர். ராமதுரை, ஒன்றிய அவைத் தலைவர் எஸ்.சூசைராஜ் பொருளாளர் த.நாகராஜன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் க.சாமிதுரை, இந்துமதி நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர். தமிழ்ச்செல்வன், கோவி. சீனிவாசன், சி.கண்ணதாசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா. சங்கர், தொமுச சம்பந்தம், நளராஜன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ந.கார்த்திகைகுமரன், திமுக நிர்வாகிகள் சோழமாதேவி தமிழ்ச்செல்வன் கோட்டியால் சேகர் மற்றும் கிளை கழக செயலாளர்கள்,பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கடையநல்லூரில் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க துணைச் செயலாளர் இல்ல புதுமனை புகுவிழா நிகழ்ச்சியில் எம்.பி கனிமொழி கலந்து கொண்டார்



தென்காசி, ஜூன்.10-

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிவராம பேட்டை கொடிகுறிச்சி ஊராட்சியை சேர்ந்த தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க துணை செயலாளரும்,மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினருமான க.கனிமொழியின் இல்ல புதுமனை புகுவிழா நிகழ்ச்சியில் திமுக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி கலந்து கொண்டார். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கனிமொழிஎம்.பிவாழ்த்துக்கள் தெரிவித்தார், அதனைத் தொடர்ந்து உரையாற்றினார். முன்னதாக கனிமொழி எம்.பி - க்கு பிரம்மாண்ட வரவேற்பு அளித்தனர்.

இந்த நிகழ்வில், தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் பொ.சிவபத்மநாதன், முன்னாள் மாவட்டச்செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் மா. செல்லத்துரை, சாமிதுரை, ஹக்கீம், வேலுச்சாமி, கடையநல்லூர் நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ் நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர்ரகுமான் கடையநல்லூர் ஒன்றியச் செயலாளர் சுரேஷ், ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், அவைத்தலைவர் பெட்டி முருகன் காசி, தம்புராஜ், காளிமுத்து, செய்யது மசூது, சாகுல் ஹமீது, வேல்சாமி, முருகன், ரஞ்சித், திரிகூடபுரம் சுப்ரமணியம், செய்யது மீரான், திவான் ஒலி, தங்கப்பாண்டியன் பிள்ளையார் பாண்டியன், ராஜ், அப்துல்வஹாப், அப்துல் மஜீத், முருகானந்தம், நல்லையா, ஆர். எஸ். மணி, ராமர் பாண்டியன், சொக்கம்பட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் செல்வகுமார் தி.மு.க நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கோவாவுக்கு 820 கி.மீ மேற்கில் மையம் கொண்டுள்ள பிபோர்ஜாய்' புயல்,–இந்திய வானிலை மையம் எச்சரிக்கை

புதுடெல்லி,ஜூன்,10

தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு அரபிக்கடலில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றுள்ளது. இந்த புயலுக்கு 'பிபோர்ஜோய்' என்று பெயரிடப்பட்டுள்ளது. வங்கதேசம் வழங்கியுள்ள 'பிபோர்ஜோய்' என்ற பெயருக்கு ஆபத்து என்பது பொருளாகும்.

இந்த புயல் வலுப்பெற்று வடக்கு நோக்கி நகர வாய்ப்புள்ளது என்றும், இந்த புயலால் கேரளா முதல் மராட்டிய மாநிலம் வரையிலான நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மழை தீவிரமடையும் என்றும் வானிலை ஆய்வாளர்கள் கூறினர்.

இந்நிலையில் தற்போது 'பிபோர்ஜாய்' புயல், கோவாவுக்கு 820 கி.மீ மேற்கில் மையம் கொண்டுள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற்று, தொடர்ந்து வடக்கு-வடகிழக்கில் நகர்ந்து செல்லும் என இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனால் தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது என்றாம் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு



மயிலாடுதுறை , ஜூன்,10

மயிலாடுதுறை மாவட்டம் , குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 7 ஆம் தேதி முதல் ஜமாபந்தி நிகழ்வு நடைபெற்று வரும் நிலையில் மூன்றாம் நாளான வெள்ளிக்கிழமை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் மகாபாரதி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வுகள் மேற்கொண்டார்.

ஆய்வின் போது ஜமாபந்தி தினத்தன்று வரப்பெற்ற மனுக்களினை பரிசீலனை செய்து உடனடியாக பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்திடவும் எதிர்வரும் நாட்களில் பொதுமக்களிடம் அதிக அளவில் விளம்பரம் செய்து மனுக்களை பெற்று பொதுமக்களின் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்திடவும்மாவட்ட ஆட்சியரால் குத்தாலம் தாசில்தாரிடம் அறிவுறுத்தப்பட்டது.

ஆய்வின்போது ஜமாபந்தி அலுவலரும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலருமான அம்பிகாபதி, குத்தாலம் வட்டாட்சியர் இந்துமதி தனி வட்டாட்சியர் காந்திமதி, தனி வட்ட வட்டாட்சியர் சண்முகம், தனிவட்டாட்சியர் பிரான்ஸ்வா, துணை வட்டாட்சியர்கள் பாபு, ராஜன், வருவாய் ஆய்வாளர்கள் பாலமுருகன், ஜெயந்தி, ஷர்மிளா மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ராஜ்மோகன், சண்முகம் , சங்கர் மற்றும் பிற துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் வரும் 13-ம் தேதி மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்

சென்னை, ஜூன் 10-

அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் வரும் 13-ம் தேதி நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அதிமுகவெளியிட்டுள்ள அறிக்கையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளரும், சட்டமன்றஎதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதல்வருமாகிய எடப்பாடி பழனிசாமி தலைமையில், தலைமைக் கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில், வருகின்ற 13.06.2023 - செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணிக்கு, மாவட்டக் ஆதிமுக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆதிமுக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் பைக் டாக்ஸிகளுக்கு அனுமதியில்லை.. அமைச்சர் சிவசங்கர்

சென்னை, ஜூன் 10-

இரு சக்கர வாகனங்கள் டாக்ஸியாக பயன்படுத்தப்படுவதை தமிழ்நாடு அரசு ஏற்கவில்லை என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பைக் டாக்ஸிகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள், பகுதிநேரமாக வேலை தேடுவோர், பணம் தேவைப்படுபவர்கள் என தங்கள் சொந்த இருசக்கர வாகனங்களை தனியார் நிறுவனத்துடன் இணைத்து அதை டாக்ஸியாக இயக்கி வருகின்றனர். ஆட்டோ, வாடகை கார்களை விடவும் கட்டண குறைவு என்பதால், பயணிகள் பலர் பைக்டாக்ஸி அணுக தொடங்கினர்.

இந்நிலையில், தமிழக அரசு பைக் டாக்ஸிக்கு தற்போது வரை அனுமதி அளிக்கவில்லை என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். இது



தொடர்பாக கோவையில் செய்தியாளர்களிடம்பேசிய அவர்," சில விஷயங்களில் மத்திய அரசுவழிகாட்டுதல் தேவைப்படுகிறது. பைக் என்பது தனி நபர் பயன்படுத்தும் வாகனம். வாடகைக்கு விடப்படும் வாகனமாக அங்கீகரிக்கப்படவில்லை. பைக் டாக்ஸிகளை பயன்படுத்த கூடாது என்பது தமிழக அரசின் நிலை. காவல்துறை இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகிறது." இவ்வாறு அவர் கூறினார்.

பைக் வாடகைக்கு விடுவதற்கு இதுவரை எந்த விதியும் நிர்ணயிக்கப்படவில்லை. தமிழக அரசை பொருத்தவரை பைக் டாக்ஸியை இதுவரை ஏற்கவில்லை எனவும் அமைச்சர் சிவசங்கரன் தெரிவித்துள்ளார்.

# புதுக்கோட்டையில் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு போலீசார் தணிக்கை 5 டன் ரேஷன் அரிசி பறிமுதல்

புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு போலீசார் நடத்திய தணிக்கையில் 5 டன் ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டன.

புதுகோட்டை குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை போலீசார்வியாழக்கிழமை மாந்தங்குடி பகுதியில் வாகன தணிக்கை செய்த போது செம்பட்டிவிடுதியை சேர்ந்த தொப்புளான் மகன் ரெகுநாதன் என்பவர் சேகரித்து வைத்திருந்த சுமார் 1000 கிலோ ரேசன் அரிசியை அவருக்கு சொந்தமான வண்டியில் கடத்தி செல்ல முயன்ற போது ரெகுநாதனை கைது செய்து ஓட்டுநரை தேடி வருகின்றனர்.

அதேபோல் திருமயம் தாலுகா கே.புதுப்பட்டி - வாழரமாணிக்கம் சாலையில் நேற்று அதிகாலை 1:00 மணி அளவில் புதுகோட்டை பறக்கும் படை தனி வட்டாட்சியர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த பொழுது மகேந்திரா பிக்கப் வாகனத்தில் பொது விநியோகத் திட்ட அரிசி கடத்தி வரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. வாகன ஓட்டுநர் வாகனத்தைவிட்டுவிட்டு ஓடிவிட்டார்.வாகனத்தில் 3948 கிலோ அரிசி இருந்தது வாகனத்தையும் அரிசியையும் பறிமுதல் செய்த அதிகாரிகள் தப்பியோடி ஒட்டுநர் மீது வழக்கு பதிவு அவரை தேடி வருகின்றனர்.

# அனுமதியின்றி பேனர் வைத்தால் 3 ஆண்டுகள் சிறை தண்டனை - தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜூன் 10-

அனுமதியின்றி பேனர் வைத்தால் 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.




தமிழகத்தில் விளம்பர பலகைகள், விளம்பர பேனர்கள் மற்றும் பதாகைகளை உரிய அனுமதியின்றி நிறுவக்கூடாது. அவ்வாறு அனுமதியின்றி பேனர், விளம்பர பலகை வைத்தால் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. அதுமட்டுமின்றி இதில் விதி மீறினால் ரூ. 25,000 வரை அபராதம் விதிக்கபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் படி உரிமம் பெறாமல் விளம்பர பலகை வைக்க முடியாது. அதேபோல் உரிமக்காலம் முடிந்ததும் பேனர்களை உடனடியாக அகற்ற வேண்டும். விபத்திற்கு காரணமான பேனர், விளம்பர பலகை வைத்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். விளம்பர பலகை, பேனரால் விபத்து, உயிரிழப்பு நேர்ந்தால் அதனை வைத்த நிறுவனமோ, தனிநபரோ இழப்பீடு வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கோவையில் பேனர் விழுந்து 3 பேர் பலியான நிலையில் விளம்பர பலகைகள் விவகாரத்தில் மீண்டும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

## தமிழகத்தில் வணிக மின்கட்டண உயர்வை திரும்ப பெற வலியுறுத்தி

# அனைத்து மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் மனு: ஜி.கே.வாசன் அறிவிப்பு

சென்னை, ஜூன் 10-

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு மின்சார கட்டணத்தை அரசு உயர்த்தியுள்ளது கண்டிக்கத்தக்கது. கொரோனாவின் தாக்கத்தில் இருந்து மீண்டு வணிக நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும் இயல்பு நிலைக்கு



திரும்பிக்கொண்டு இருக்கும் இந்த நிலையில் தற்போது தமிழக அரசு மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளது.

இதனால் அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும். ஏழை எளிய நடுத்தர மக்கள் மீது தான் மேலும் சுமை ஏறும். எனவே, உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை அரசு திரும்ப பெற வலியுறுத்தி வரும் 12ம் தேதி தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட ஆட்சியர்கள் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்ப்பு நாளில் ஆட்சியரை சந்தித்து தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் மனு அளிக்க உள்ளோம், இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முக்கடல் அணையை தூர் வாருவதில் தொடரும் அலட்சியம்

## 5 அடிக்கு மண்டிக் கிடக்கும் சகதி



**நாகர்கோவில் , ஜூன். 10-**

நாகர்கோவில் மாநகருக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணையை தூர்வாருவதில் தொடர்ந்து அலட்சியம் காட்டுவதால் 5 அடிக்கு சகதி மண்டிக் கிடக்கிறது. இதனால் பருவ மழைக் காலங்களில் முழுகொள்ளளவுக்கு தண்ணீரை தேக்கிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகராக விளக்கும் நாகர்கோவில் மாநகரில் குடிநீர் ஆதாரமாக முக்கடல் அணை உள்ளது. 25 அடி உயரம் கொண்ட இந்த அணையில் இருந்து விநாடிக்கு 8 கனஅடியில் இருந்து 10 கனஅடி தண்ணீர் நாகர்கோவிலுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அப்படி இருந்தும் வாரம் ஒருமுறையே சுழற்சி முறையில் மக்களுக்கு குடிநீர் கிடைக்கிறது.

ஆண்டுதோறும் ஏப்ரல், மேமாதத்தில் முக்கடல் அணை நீர்மட்டம் மைனஸ் நிலைக்கு வரும்போது, குடிநீர் தட்டுப்பாட்டால் மக்கள் அவதியடை வதை போக்க பேச்சிப்பாறை அணையில் இருந்து முக்கடல் அணைக்கு தண்ணீர் திறந்து விட்டு அங்கிருந்து நாகர்கோவில் கிருஷ்ணன்கோயில் சுத்திகரிப்பு நிலையத்துக்கு கொண்டு வந்து விநியோகம் செய்யப்படுகிறது.

5 அடிக்கு சகதி நிரம்பியது: குடிநீர் தட்டுப்பாடை நிரந்தரமாக போக்கும் வகையில் தொடங்கப்பட்ட புத்தன்அணை திட்டத்தில் இறுதிக்கட்ட பணிகள் முடிந்து சோதனைஓட்டம் நடந்து வருகிறது. இது ஒருபுறமிருக்க முக்கடல் அணையின் நீர்பிடிப்பு தன்மை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. அணையை தூர்வாரி20 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால்5 அடி வரை சகதி நிரம்பியுள்ளது.

புத்தன் அணை திட்டம் நடைமுறைக்கு வந்தாலும், முழு குடிநீர்தேவையை முக்கடல் அணை நீர் மூலம் பூர்த்தி செய்ய இயலும். ஆனால் புத்தன் அணையை தூர்வாராமல் நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் அலட்சியம் காட்டுவது பொதுமக்களை கவலையடைய செய்துள்ளது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் மன்னரான பத்மநாபதாச உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மாவால் நாகர்கோவில் நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும்வகையில் கட்டப்பட்டு 1945-ம் ஆண்டு ஜூன் 20-ம் தேதி முக்கடல் அணை திறக்கப்பட்டது.

அப்போது இந்த அணை கட்டுவதற்கு ஆன மொத்த செலவு ரூ.20 லட்சத்து 53 ஆயிரம் ஆகும். 25 அடி ஆழம் கொண்ட அணையின் நீர்பிடிப்பு பகுதி 17.48 சதுர கிமீ. அணையின் நீளம் 1,080 அடி, உயரம் 52 அடி. அடிமட்ட அகலம் 314 அடி. இந்த அணை கட்டபட்டபோது நாகர்கோவில் நகரின் மக்கள் தொகை 51 ஆயிரத்து 603 பேர் மட்டுமே.

கடந்த 1,979 மற்றும் 2,000 ஆண்டில் அபிவிருத்தி பணி மேற்கொண்ட போதும் தற்போதுள்ள 4 லட்சம் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியாத சூழல் நிலவுகிறது. எனவே, முக்கடல் அணையை தாமதமின்றி தூர்வாரி முழு கொள்ளளவுக்கு நீரை தேக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீர்வழிப் பாதையில் தடை: இதுகுறித்து சமூக ஆர்வலர் சங்கரபாண்டியன் கூறும்போது, ‘‘முக்கடல் அணைக்கு நச்சுக்கால் ஓடை ,எருமைப்பட்டி, இஞ்சிக்கடவு, பிரந்தனேரி ஓடை, ஏணியேந்தல், குளத்துவிளை ஓடை மூலமாக நீர் வருகிறது. இங்கிருந்து வரும் மணல் அணையில் தேங்குவதால் நீர்வழிப் பாதை தடைபட்டு அணைக்கு நீர்வரத்து குறையும் நிலை உள்ளது.

இதனால் நாகர்கோவில் நகர மக்களின் குடிநீர் தேவையை அணையால் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் தற்போது 15 நாட்களுக்கு ஒரு முறையே குடிநீர் விநியோகம் செய்யும் அவலம் உள்ளது. அணையை தூர்வாரினால் கூடுதலாக நீரை தேக்க முடியும். இதனால் சீராக மக்களுக்கு குடிநீர் விநியோகிக்க இயலும். இதுகுறித்து குமரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளோம். இந்த ஆண்டாவது முக்கடல் அணையை தூர்வார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்” என்றார்.

# திருப்பதி கோவிலுக்கு சென்றபோது சென்னை பக்தர்களின் கார் நடுரோட்டில் தீ பிடித்து எரிந்தது

திருப்பதி,ஜூன்.10-

ஆந்திர மாநிலம் பாலாஜிகோல்டன்சிட்டி அருகேசென்றபோது கார் என்ஜினில் இருந்து புகை வந்தது. காரின் என்ஜின் பகுதியில் கம்பிகள் அறுந்து கிடந்ததால் மின் கசிவு ஏற்பட்டு கார் தீப்பிடித்து எரிந்தது தெரிய வந்தது.

சென்னை ராயப்பேட்டையை சேர்ந்தவர் சுந்தரராஜ், இவர் தனது மனைவி மற்றும் குடும்பத்தினர் 4 பேருடன் திருப்பதி கோவிலுக்கு காரில் சென்றனர். ஆந்திர மாநிலம் பாலாஜி கோல்டன் சிட்டி அருகே சென்றபோது கார் என்ஜினில் இருந்து புகை வந்தது. இதனை கண்டு திடுக்கிட்ட சுந்தரராஜ் உடனடியாக காரை சாலையோரம் நிறுத்திவிட்டு சரி செய்ய முயன்றார். காரில் இருந்து அதிக அளவில் புகை வந்ததால் அதனை திறக்க முடியவில்லை. இதனால் பதற்றம் அடைந்த சுந்தரராஜ் அசம்பாவித சம்பவம் நடக்கப் போவதாக எண்ணினார். தனது குடும்பத்தினரை காரில் இருந்து வெளியேறுமாறு கூறினார்.

அவரது குடும்பத்தினர் காரை விட்டு இறங்கி ஓடினர். அவர்கள் எதிர்பார்த்தது போலவே திடீரென காரில் பெரிய அளவில் தீ பரவியது. அவர்கள் கண்முன்னே கார் முழுவதும் மளமளவென தீப்பிடித்து எரிந்தது. இதனைக் கண்ட அப்பகுதி மக்கள் உடனடியாகதீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். ஆனால் கார் முழுவதும் எரிந்து நாசமானது. காரின் என்ஜின் பகுதியில் கம்பிகள் அறுந்து கிடந்ததால் மின் கசிவு ஏற்பட்டு கார் தீப்பிடித்து எரிந்தது தெரிய வந்தது. சுந்தர்ராஜ் தனது குடும்பத்தினரை முன்னெச்சரிக்கையாக காரில்இருந்துஉடனடியாக வெளியேற கூறியதால் அதிர்ஷ்டவசமாக 4 பேர் உயிர் தப்பினர். இந்த சம்பவத்தால் நகரி சாலையில் போக்குவரத்து பாதிக்கபட்டது.

# தென்காசியில் மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்

தென்காசி, ஜூன். 10-

தென்காசி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நல துறையில் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 7 மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் துரை. ரவிச்சந்திரன் வழங்கினார்.



தென்காசி மாவட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வயது வரம்பு தளர்த்தி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உதவித்தொகை வழங்குவதற்கு மாற்றுத் திறனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 7 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூபாய் 8500 வீதம் மொத்தம் ரூபாய் 59 ஆயிரத்து 500 மதிப்பில் காதொலி கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் துரை ரவிச்சந்திரன் வழங்கினார். இக்கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் ஷீலா மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஜெயபிரகாஷ் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

## தமிழகம் உள்பட நாடு முழுவதும்

# 50 புதிய மருத்துவ கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி

புதுடெல்லி, ஜூன்.10-

நாடு முழுவதும் 50 புதிய மருத்துவ கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதில் தமிழகத்துக்கு புதிதாக 3 மருத்துவ கல்லூரிகள் அமைய உள்ளன.



தமிழ்நாட்டில் 3 மருத்துவ கல்லூரிகள் உள்பட நாடு முழுவதும் 50 புதிய மருத்துவ கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்மூலம் மருத்துவ படிப்பிற்கு கூடுதலாக 8,195இளங்கலைஇடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எம்.பி.பி.எஸ். இடங்களின் எண்ணிக்கை 94 சதவீதம் அதிகரித்து, தற்போது 99,763 ஆக அதிகரித்துள்ளது. இந்த 50 புதிய மருத்துவ கல்லூரிகளில் (30 அரசு மற்றும் 20 தனியார்) கல்லூரிகளாகும்.

அதன்படி, தெலுங்கானா, ராஜஸ்தான், தமிழ்நாடு, ஒடிசா, நாகாலாந்து, மகாராஷ்டிரா, அசாம், கர்நாடகா, குஜராத், ஹரியானா, ஜம்மு காஷ்மீர், மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் புதிதாக 50 மருத்துவக் கல்லூரிகளை தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில், தெலுங்கானாவுக்கு மட்டும் 12 புதிய மருத்துவ கல்லூரி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 3 மருத்துவ கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய மருத்துவ ஆணையத்தின் (என்.எம்.சி) இளங்கலை மருத்துவக் கல்வி வாரியத்தின் ஆய்வுகளின் போது, பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளை சரியாக பின்பற்றவில்லை எனக் கூறி நாடு முழுவதும் உள்ள 38 மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரம் கடந்த இரண்டரை மாதங்களில் திரும்பப் பெறப்பட்டது.

கல்லூரிகள் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றவில்லை என்றும், சிசிடிவி கேமராக்கள், ஆதார் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் வருகை நடைமுறைகள் மற்றும் ஆசிரியர் பட்டியல்கள் தொடர்பான பல குறைபாடுகள், கமிஷனின் யுஜி போர்டு நடத்திய ஆய்வுகளின் போது கவனிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர். நாட்டில் 2014-ம் ஆண்டுக்கு முன்பு 387 ஆக இருந்த மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 69 சதவீதம் அதிகரித்து தற்போது 654 ஆக அதிகரித்துள்ளது என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

# பாலன்நகர் அரசு உயர்நிலைப்பள்ளியில் மரக்கன்றுகள் நடும் விழா

**புதுக்கோட்டை , ஜூன்.10-**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பாலன்நகர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 9ஏ நத்தம் பண்ணை ஊராட்சி மன்ற தலைவர் பாபு தலைமையில் பள்ளிக்கல்வித்துறையின் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், பள்ளியின் தலைமை ஆசிரியர் சத்யராஜ் ஆகியோர் முன்னிலையில் உலக வெப்பமயமாதலை குறைக்கும் விதமாக மரக்கன்றுகள் பள்ளி வளாகத்தில் நடப்பட்டன. இந்நிகழ்வில் விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் மிசா மாரிமுத்து, பள்ளி மேலாண்மை குழு தலைவர் இந்திராணி பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் ரங்கசாமி, கோவிந்தராஜ், செல்வராஜ், சூரியா பழனியப்பன், ஊராட்சி மன்றவார்டுஉறுப்பினர்கள் ஆசைத்தம்பி, வீரம்மாள் பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# புதுச்சேரி காங்கிரஸ் தலைவராக வைத்திலிங்கம் எம்.பி நியமனம்

**புதுடெல்லி , ஜூன்.10-**

அகில இந்திய காங்கிரஸ் கட்சி சார்பில் பல்வேறு மாநிலங்களுக்கு தலைவர்களை நியமனம் செய்து அறிவிப்பு வெளியானது.

அதன்படி, புதுச்சேரி காங்கிரஸ் தலைவராக மக்களவை எம்பி வி.வைத்திலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். குஜராத் மாநில காங்கிரஸ் தலைவராக மாநிலங்களவை எம்பி ஷக்திசின் கோஹிலும், அரியானா மற்றும் டெல்லி காங்கிரஸ் தலைவராக தீபக் பபாரியாவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மும்பை காங்கிரஸ் தலைவராக வர்ஷா கெய்க்வாட் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மின் கட்டண உயர்வுக்கு அதிமுகவே காரணம் திருச்சியில் முதல்வர்

# நாடு முழுவதும் 50 மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி





# துணை முதல்வர் பதவி குறித்த தகவல் முற்றிலும் தவறானது


சென்னை / புதுக்கோட்டை | 10.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் , தென்னிந்திய மிருதங்க இசைக் கலைஞர் (பி.1912) (இ.1981)



வே. தில்லைநாயகம் , தமிழக நூலகத்துறையின் முன்னோடி (பி.1925) (இ.2013)



நந்தமூரி பாலகிருஷ்ணா , இந்திய நடிகர், அரசியல்வாதி (பி.1960)



சுந்தர் பிச்சை , இந்திய-அமெரிக்க கணினி தொழில்நுட்ப மேலாளர் (பி.1972)



## இன்றைய நினைவு நாள்

கே. முத்தையா , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1918) (இ.2003)



கிரேசி மோகன் , தென்னிந்திய நடிகர், நாடகாசிரியர் (பி.1949) (இ.2019)



கிரிஷ் கர்னாட் , கன்னட நடிகர், எழுத்தாளர் (பி.1938) (இ.2019)

